DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 234/ 2015
Deposition of PW3- **தீர்த்தநாதன்** Cross

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.10.2025

**எதிரி ஆஜர்**

**Cr.M.P. No.5130/2024 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி.**

வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வீட்டிற்குள் இருந்தேன். ஐயோ என்று சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். எதிரி எனது மனைவி அ.சா.1 யை ஓட்டால் அடிக்கவும் இல்லை. அ.சா.1 க்கு கண்ணிலும் மூக்கிலும் கையிலும் காயங்கள் ஏதும் ஏற்படவும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு மயக்கம் ஏற்படவில்லை என்றாலும் அந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. தண்ணீர் எடுத்துக்கொண்டு என் வீட்டு வாசல்படியில் ஏறும் போது கால் வழுக்கி கீழே விழுந்ததால் தான் அ.சா.1 க்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்வத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சம்வயிடத்திலும் அ.சா.1 க்கு இரத்தம் படிந்திருந்தா என்றால் படிந்திருந்தது. எதிரி மீது கொண்ட முன்விரோதம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.10.27 17:41:03 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 234/ 2015
Deposition of PW1- செல்வி Cross

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.10.2025

எதிரி ஆஜர்

**Cr.M.P. No.5130/2024 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி.**

1.) சம்பவம் நடந்த அன்றே புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். காவலர்கள் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். மருத்துவர் என்னை எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என கேட்டப்போது நான் உண்மையை சென்னேன். என்னை தெரிந்த 4 க்கு பேர் தாக்கினார்கள் என்று நான் சொல்லியதாக மருத்துவர் அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் தவறு என்னை ஒரு நபர் தான் தாக்கினார் என்று சொன்னேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் ஒய்ட்னர் பூசி அழிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு உடைந்த ஓட்டுக்கும் உடையாத ஓட்டுக்கும் கல்லுக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு சிகிச்சை செய்த மருத்துவரிடம் என்னை தெரிந்த 4 நபர்கள் கல்லால் தாக்கியதாக கூறிப்பிட்டேனா என்றால் இல்லை. காயம் பட்ட என்னை யார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கூட்டி சென்றார்கள் என்றால் தெரியாது. ஓட்டால் அடிப்பதற்கும் ஏறிவதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். எனது வீட்டின் பின்பகுதி மேற்கு பக்கம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு நானோ கட்டிக்கொண்ட வீடு. அதற்கு பொது சுவர் இல்லை. குறித்த தீயா வார்த்தையால் எதிரி என்னை திட்டவில்லை என்றால் திட்டினார்.

2) சிகிச்சையில் இருந்த 5 வது நாள் மூக்கின் உடைந்த பகுதியில் இருந்து இரத்தம் வெளியேறி கொண்டிருந்ததால் மருத்துவர் அறுவைச்சிகிச்சை செய்தார் என்றும் கண்பார்வை சரியாக தெரியவில்லை என்றும், சுவாச பிரச்சனை இருந்தது என்றும் தலையில் சுமை வைத்து சுமாக்கமுடியவில்லை என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். ஆண் போலீசார் மற்றும் பெண் போலீசார் இருவருமே விசாரித்தார்கள். Discharge ஆன பிறகு தொடர்ந்து சிகிச்சையில் இருந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். _எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிக்கும் தொடர்வில்லை என்றால் சரியல்ல. அவர் தான் காரணம். தண்ணீர் எடுத்துக்கொண்டு என் வீட்டு வாசல்படியில் ஏறும் போது கால் வழுக்கி கீழே விழுந்ததால் தான் காயங்கள் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. எனக்கு சம்பவத்தின் போது எனது உடை மற்றும் சம்பவ இடத்தில் இரத்தம் படிந்திருந்தது. புகார் வாக்குமூலத்தில் எதிரி என்னை ஒரு முறை ஓட்டால் ஏறிந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் வந்து தான் என்னை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். புகார் வாக்குமூலம் பெற்ற காவலர் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எதிரி மீது கொண்ட முன்விரோதம் காரணமாக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு வடக்கு பக்கம் பூச்சிவாசகம் வீடு உள்ளது என்றால் சரிதான். அம்மச்சியம்மன் கோவில் வடக்கு பார்த்த வாசல் கொண்டது என்றால் சரிதான். எனது தெருவில் பெரியசபரிமணி வீட்டிற்கு பின்புறம் சின்னசபரிமணி வீடு உள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.10.27 17:41:11 +0530

Judicial Magistrate,
Andipatti.